<u>**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கரூர்**</u>

**முன்னிலை – திரு.எம்.சார்லஸ் ஆல்பர்ட், பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை**

<u>குற்றவியல் பல்வகை மனு எண்.353/2026</u>
<u>குற்ற எண். 24/2026</u>

**அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
வாங்கல் காவல் நிலையம்,
**குற்ற எண்.24/2026** ....முறையீட்டாளர்/மனுதாரர்.

**– எதிர் –**

**பிரபாகரன் @ சதீஸ்,**
த/பெ.மாணிக்கம்,(லேட்)
நெ.5/732 மாதேஸ்வரன் காரடு,
முனியப்பன் கோவில் வீதி,
S.நாட்டமைபுரம்,
அம்மாணி கொண்டலாம்பட்டி,
சேலம் மாவட்டம். ..... எதிர்மனுதாரர்/எதிரி.

இக்குற்றப்பல்வகை மனுவான 26.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பினுக்கு எடுக்கப்பட்டும், முறையீட்டாளர்/மனுதாரர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் வாங்கல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் முன்னிலையாகியும், எதிரியின் தரப்பில் தானே, நடத்திட இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் உத்தரவு பின்வரும்

<u>**உத்தரவு**</u>

பி.என்.எஸ்.எஸ் பிரிவு 187(7) பிரிவு மற்றும் 76 கிரிமினல் ரூல்ஸ் ஆப் பிராக்டீஸ் கீழ் வாங்கல் காவல்நிலைய ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 24/2026 u/s.331(3), 305 BNS ன் கீழ் வழக்கில் தான் புலன் விசாரணை செய்து வருவதாகவும், மேற்படி விசாரணையில், புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி குற்ற எண்ணில் u/s.331(3), 305 ன் படியாக வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரியானவர் கரூர் கிளைச்சிறையில்

நீதிமன்றகாவலில் இருந்து வருகிறார். மேற்படி எதிரியை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவும், எதிரியிடமிருந்து வழக்கு தடயச் சொத்தை கைப்பற்றவும், உண்மை நிலையை கண்டறியவும் மேற்படி எதிரியை விசாரித்து புலன் விசாரணைக்கு தகவல் தர வேண்டியும், போலீஸ் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தாக்கல் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்து இம்மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

2) எதிர்மனுதாரர்/எதிரி இன்று 27.03.2026ம் தேதி என் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிக்கு போலீஸ் காவலுக்கு உட்படுத்துவதற்கான நகல்கள் வழங்கப்பட்டது.

3) போலீஸ் விசாரணைக்கு செல்வது குறித்து, எதிர்மனுதாரர்/ எதிரியிடம் வினவியபோது, எதிரி தனக்கு தனக்கு போலீஸ் காவலில் செல்ல ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளார். எதிரி காவல்துறையினருடன் விசாரணைக்கு செல்வதற்கு சம்மதித்து செய்து கையொப்பமிட்டனர்.

4) மனுதாரரான வாங்கல் காவல் நிலைய காவல் ஆய்வாளர், மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தில் கண்ட சங்கதிகளை எடுத்துரைத்தும் எதிரியை தன் வசம் விசாரணைக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் எதிரியின் மனதிற்கோ, உடலுக்கோ, எந்தவிதமான ஊறுவிளைக்கும் வகையில் செயல்படமாட்டேன் என்றும் எதிரிக்கு போதிய உணவு, உறைவிடம், மற்றும் மருத்துவ வசதி செய்து கொடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் கற்றறிந்த உதவி குற்றவியல் வழக்கறிஞர் செல்வி. R.முருகேஸ்வரி அவர்கள் ஆஜராகி, எதிரியின் மீது வாங்கல் காவல் நிலைய குற்ற எண்.24/2026 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, எனவே இந்த எதிரியை காவல் துறை காவலில் எடுப்பதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை என்றும், காலதாமதப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கமும் இல்லை என்றும், காவல் துறை காவலில் எதிரியை எடுத்து விசாரணை செய்வது அவசியம் என்றும், அது விசாரணையில் ஒரு பகுதியாகும் என்றும், இந்த மனு பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா 2023ல் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனு அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என வாதிட்டார்.

6) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7) இவ்வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/ எதிரியிடமிருந்து எவ்வித பொருட்களும் கைப்பற்றப்படாத நிலையில், மற்றொரு குற்றவாளியான கோபாலகிருஷ்ணன் என்பவரை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சில பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வழக்கில் திருடுபோன மீதமுள்ள

நகைகள் மற்றும் இவ்வழக்கில் வேறு நபர்கள் ஈடுபட்டுள்ளார்களா என்ற உண்மை விபரங்களை வெளிக்கொணரவும், நீதியின் நலன் கருதியும் காவல் துறை காவலில் எதிரியை உட்படுத்தி விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டியது இவ்வழக்கின் புலன் விசாரணைக்கு அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், நீதியின் நலன் கருதியும், சட்டத்திற்கு உட்பட்டும் மனுதாரர் கூறிய மூன்று நாட்களுக்கு எதிரியை விசாரணைக்காக காவல் துறை காவலில் கொண்டு செல்வதற்கு இந்நீதிமன்றம் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இம்மனுவினை அனுமதித்து உத்தவிடப்படுகிறது.

அ எதிர்மனுதாரர்/ எதிரியை இன்று 27.03.2026 இன்று மாலை 05.30 மணிக்கு ஒப்படைத்தும் மீண்டும் 30.03.2026ம் தேதியன்று மாலை 05.30 மணி வரை மூன்று நாட்கள் மட்டும் போலீஸ் காவலுக்கு திருமதி.S.பாரதி, வாங்கல் காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

ஆ திருமதி.S.பாரதி, காவல் உதவி ஆய்வாளர்(பொறுப்பு), வாங்கல் காவல் நிலையம் அவர்கள் எதிர்மனுதாரர்/ எதிரியை தன் பொறுப்பில் வைத்திருக்கும்பொழுது, உணவு, உடை, மருத்துவ வசதி, சுகாதார வசதி ஆகியவற்றை செய்து தரவேண்டும்.

இ எதிர்மனுதாரர்/எதிரியை போலீசார் உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ துன்புறுத்தக்கூடாது.

ஈ எதிர்மனுதாரர்/ எதிரியை நல்ல நிலையில், வருகின்ற 30.03.2026ம் தேதி மாலை 05.30 மணிக்கு முன்பு, இந்நீதிமன்றத்தில் உரிய மருத்துவ தகுதிச் சான்றுடன் ஆஜர்படுத்த வேண்டும்.

உ எதிர்மனுதாரர்/எதிரியை தேவையான மருத்துவ வசதியும் செய்து தரவேண்டும்.

ஊ போலீஸ் காவலில் எதிர்மனுதாரர்/ எதிரி இருக்கும் நேரத்தில் விசாரணை நேரம் தவிர எதிர்மனுதாரர்/ எதிரி அவர்களது வழக்கறிஞர்கள் அல்லது உறவினர்கள் சந்திக்கவும் அனுமதி வழங்கிட வேண்டும்.

இவ்வுத்திரவு இன்று 27.03.2026 ம் தேதி என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT
DN: cn=M CHARLES ALBERT, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**நீதித்துறை நடுவர் எண்.2**
**கரூர்**

<u>நகல்கள்</u>

1) மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) கண்காணிப்பாளர் அவர்கள்,கிளைச்சிறை, கரூர் .

3) திருமதி.S.பாரதி, காவல் உதவி ஆய்வாளர்(பொறுப்பு), வாங்கல் காவல் நிலையம், கரூர் மாவட்டம்.

4) எதிரி– பிரபாகரன்.

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT
DN: cn=M CHARLES ALBERT, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கரூர்.**